2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல தோட்டக்கலை அறிவியலில் இரண்டு ஆண்டுகால பட்டயப் படிப்பு 50 மாணவர்களோடு தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்காக 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 287, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

287—

புதிய மாவட்டம்

***4231—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வருவாய்த் துறையின் அரசாணை (நிலை) எண் 279–ன்படி ஒரு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டுமென்றால், அதற்கென்று ஒரு அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையில் அந்த அளவுகோலின்படி பரப்பளவு, கிராமங்களின் எண்ணிக்கை, கோட்டங்களின்

எண்ணிக்கை பூர்த்தியாகாத காரணத்தினாலே, தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க தற்போதைய நிலையிலே வழிவகைகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.*

முற்பகல் 10–35

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். அம்மா அவர்களுடைய அரசை சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளதென்றும், அதன்படி வாய்ப்பு இல்லை என்பது போலவும் பதில் அளித்தார்கள். ஆனால், சங்கரன்கோவில், கடையநல்லூர், வாசுதேவநல்லூர், தென்காசி மற்றும் ஆலங்குளம் ஆகிய 5 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளைத்தான் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து பிரித்து தனி மாவட்டமாக உருவாக்க வேண்டுமென்று நான் என்னுடைய கோரிக்கையாக வைத்திருந்தேன். இந்த 5 சட்டமன்றத் தொகுதிகளில் கிட்டத்தட்ட 7 வட்டாட்சியர் அலுவலகங்கள் இருக்கின்றன. ஆனால், 4 வட்டாட்சியர் அலுவலகங்கள் இருந்தாலே தனி மாவட்டத்திற்கு தகுதியானது என்று நான் நினைக்கின்றேன். அதுமட்டுமல்ல, இந்த 7 வட்டாட்சியர் அலுவலகங்களில் கிட்டத்தட்ட 195 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமங்களில் எதுவுமே சிறிய வருவாய்க் கிராமங்கள் இல்லை. அதுவும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தென்காசியிலே 20 வருவாய்க் கிராமங்கள், கடையநல்லூரிலே 30 வருவாய்க் கிராமங்கள், செங்கோட்டையிலே 21 வருவாய்க் கிராமங்கள், சங்கரன்கோவிலில் 44 வருவாய்க் கிராமங்கள், ஆலங்குளத்தில் 35 வருவாய்க் கிராமங்கள், வீரகேரளம்புதூரில் 24 வருவாய்க் கிராமங்கள், சிவகிரியில் 21 வருவாய்க் கிராமங்கள் என கிட்டத்தட்ட 195 வருவாய்க் கிராமங்கள் உள்ளன.

2018 ஜூலை 9]

அதுமட்டுமல்ல, ஏற்கெனவே தென்காசியில் கோட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. சங்கரன்கோவிலில் இன்னொரு கோட்டாட்சியர் அலுவலகம் தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களிடம் கேட்கும்போதுகூட, இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அதற்கான அறிவிப்பு வரும் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்று என்னிடம் கூறினார்கள். ஆகையால், கோட்டாட்சியர் அலுவலகத்தை அரசு அறிவிக்கும்போதே இதைத் தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். மேலும், தென்காசிக்கு ஒரு சிறப்பு என்னவென்றால், தமிழ் பிறந்த மண். பொதிகைத் தென்றல் வீசும் இடம். அதுமட்டுமல்ல, வரலாற்றுச் சிறப்புமிக்க காசி விஸ்வநாதர் கோயில் இருக்கக்கூடிய அந்த இடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி மாவட்டம் உருவாக்கித் தர வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். சென்ற முறை, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும்போது கேட்டபோதுகூட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்கு கொண்டுசென்று ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கட்டாயம் இதை விரைவுபடுத்தி செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பரப்பளவு, வருவாய்க் கிராமங்கள், கோட்டம், வட்டாட்சியர் அலுவலகங்கள் போன்ற எண்ணிக்கைகளையெல்லாம் சொன்னார்கள். குறைந்த அளவு 2,500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு இருக்க வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். மாண்புமிகு மன்னாதி மன்னன் மக்கள் திலகம் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தூத்துக்குடி மாவட்டம் பிரிக்கப்பட்டதற்கு பிறகு 1,903 சதுர கிலோ மீட்டர் மட்டுமே உள்ளது. அதேபோல, 10 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை மக்கள் தொகை இருக்கவேண்டும். தென்காசியின் தற்போதைய மக்கள் தொகை 10,34,000 ஆக இருக்கிறது. அந்த நிபந்தனை பூர்த்தியாகவில்லை. அதேபோல 5 வட்டங்கள் உள்ளதால் அரசின்*

நிபந்தனை பூர்த்தியாகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மைதான். ஆனால், 200 வருவாய்க் கிராமங்கள் இருக்க வேண்டும். ஆனால், பிரித்த பிறகு தென்காசியிலே 132 வருவாய்க் கிராமங்கள்தான் இருக்கும் நிபந்தனைகளில் அதுவும் பூர்த்தியாகவில்லை. அதேபோல, 2 கோட்டங்கள் உருவாக வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சங்கரன்கோவிலை தலைமையிடமாகக்கொண்டு ஒரு புதிய கோட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஏற்கெனவே ஒரு கோட்டம்தான் இருக்கிறது. அந்த நிபந்தனையும் பூர்த்தியாகவில்லை. ஆகவேதான், தற்போதைய நிலையிலே இது பரிசீலனையில் இல்லை.

எப்போதுமே ஆட்சி எல்லைகளை மாற்றியமைத்து, வருவாய்த் துறையினுடைய சேவையை விரைவாகக் கொண்டுசெல்வதிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசும், புரட்சித் தலைவருடைய அரசும் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியிருக்கின்றன. அந்த வகையிலே 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு ஈரோடு மாவட்டமும், 1985 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களும், 1985 ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு திண்டுக்கல் மாவட்டமும், 1986 ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு தூத்துக்குடி மாவட்டமும், அதேபோல மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு நாகப்பட்டினம் மாவட்டமும், 1993, 1995, 1996 ஆம் ஆண்டுகளில் என்று பல்வேறு காலகட்டங்களிலே சூழ்நிலைகளுக்கேற்ப இந்த நிபந்தனைகளெல்லாம் பூர்த்தியாகின்றபோது பல்வேறு மாவட்டங்களைப் புதியதாக உருவாக்கியிருக்கிறார்கள். 2004 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, புதியதாக 72 வட்டங்கள், 10 கோட்டங்கள் உருவாகும்போது இதுபோன்ற மாவட்டங்களையெல்லாம் மக்களுடைய தேவைகளை அறிந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு

பிரித்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலை, பரப்பளவு, வருவாய்க் கிராமங்கள், கோட்டங்கள் இவையெல்லாம் பூர்த்தியாகின்றபோது செய்து தரப்படும். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தைப் பிரிக்க ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் வேலூர் மாவட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, திருநெல்வேலியை காட்டிலும் பெரிய மாவட்டங்கள் இருக்கின்றன. அவற்றையும் அரசு கருத்தில்கொண்டிருக்கிற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தத் தொடர் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு 5 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. அதில் வாக்காளர்கள் மட்டுமே சுமார் 12 இலட்சத்து 50 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். மக்கள்தொகை என்று பார்க்கப்போனால் சுமார் 17 இலட்சத்திற்கும் மேலாக இருப்பார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டும். ஏனெனில், அங்கு மாவட்ட தலைமை மருத்துவமனை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மின் பகிர்மான வட்டத்தை உருவாக்கித் தருவதாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல், தென்காசி தொகுதிக்குட்பட்ட கீழப்பாவூர் ஒன்றியத்தில் திப்பணம்பட்டி என்ற ஒரு பஞ்சாயத்து உள்ளது.

அங்கு வருவாய்க் கிராமங்கள் என்று எடுத்துக்கொண்டால், ஒருபுறம் திப்பணம்பட்டி, மறுபுறம் ஆவுடையானூர், நடுவிலே அரியப்பபுரம் என்ற ஒரு பஞ்சாயத்து உள்ளது. அங்கு சுமார் 7,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். மக்கள் தொகை என்று பார்த்தால் சுமார் 10,000 பேர் இருக்கிறார்கள். நம்முடைய அரசு வழங்கக்கூடிய எந்தவொரு திட்டமாக இருந்தாலும், வருவாய்க் கிராமங்கள் அடிப்படையில் செல்லும்போது, பாதிபேர் திப்பணம்பட்டி பஞ்சாயத்திற்குச் செல்கிறார்கள், பாதிபேர் ஆவுடையானூர் கிராமத்திற்குச் செல்கிறார்கள். அதனால், இந்த அரியப்பபுரம் கிராமத்தில் இருக்கக்கூடிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வமோகன்தாஸ் பாண்டியன், ஒரு கேள்வியை இப்படியா கேட்பது? இன்றைக்கு நேரம் இல்லை அல்லவா? இன்றைக்கு* guillotine time *இருப்பதால், 2 மணிக்குள் முடித்தாக வேண்டும். கேள்வி நேரத்தில், கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டு, சிறிது உதவி செய்யுங்கள்.*

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *சுருக்கமாகக் கேட்டுவிடுகிறேன். ஆகையினால் அரியப்பபுரம் பஞ்சாயத்தை தனி வருவாய்க் கிராமமாகப் பிரித்துத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் புதிய மாவட்டம் தொடர்பான கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். வருவாய்க் கிராமத்தைச் சீரமைப்பது குறித்த கோரிக்கையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 288, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*